492

உ

கடவுள் துணை.

எத்தேசங்களிலும்
இடைவிடாமல் சிந்தித்துவரும்

# மாரியம்மன் தாலாட்டு



21 JUL 1923

இ. ராமசாமிக் கோன்,
...டர் & பப்ளிஷர்,
...சிழலவீதி; மதுரை,
...1923 [அணா 1.
...ர் பிரஸ், மதுரை.

Q25:41()
N23
129887

உ

பராசத்தி துணை.

எத்தேசங்களிலும்

இடைவிடாமல் சிந்தித்துவரும்

# மாரியம்மன் தாலாட்டு.



JUL 1923

இ. ராமசாமிக் கோன்,

பிரிண்டர் & பப்ளிஷர்

வடக்காவணி மூலவீதி மதுரை.

இதன் விலை 1923 அணா 1.

எக்ஸெல்ஸியர் பிரஸ், மதுரை.

பராசத்தி துணை.

# எத்தேசங்களிலும் இடைவிடாமல் சிந்தித்துவரும் மாரியம்மன் தாலாட்டு.

---

## விநாயகர் துதி.

### காப்பு.

கொச்சகக்கலிப்பா.

பூதலத்தார் யாரும் பொருந்தவே என்னாளும்
மாதரசி என்று வாழ்த்துகின்ற மாரியம்மன்
தோனார் தங்கை சிறப்பான தாலாட்டைக்
காதலுட னோதக் கணபதியுங் காப்பாமே.

## வெண்செந்துறை.

முந்தி முந்தி விநாயகரே முக்கணனார் தன்மகனே
கந்தருக்கு முன்பிறந்த கற்பகமே முன்னடவாய்
வேலவர்க்கு முன்பிறந்த விநாயகரே முன்னடவாய்
வேம்படியிற் பிள்ளையாரே விக்கினரே முன்னடவாய்
பேழைவயிற்றோனே பெருச்சாளி வாகனனே
காரான மால்மருகா கற்பகமே மெய்ப்பொருளே
சீரான நல்மருகா செல்வக்கணபதியே
ஒற்றைக்கொம் போனே உமையாள் திருமகனே
கற்றைச் சடையணிந்த கங்காதரன் மகனே
வித்தைக்கு விநாயகனே வெண்ணெயுண்டோன் தன்ம [ருகா
மத்தகக் கரிமுகவா மாயோன் மருகோனே
ஐந்துகரத்தோனே யானைமுகத்தோனே
தந்திமுக வாரணனே தற்பரனே முன்னடவாய்
நெஞ்சிற் குடியிருந்து நீயெனக்கு முன்னடவாய்
பஞ்சஞ்சு மெல்லடியாள் பார்வதியாள் புத்திரனே
வேழமுகத்தோனே விநாயகரே முன்னடவாய்

தாழ்வில்லாச்சங்கரனார் சற்புத்ரா வாருமையா
முன்னடக்குமையா நின் கண்ணடக்கம் பொன்னாலே
கண்ணடக்கம் பொன்னாலே காற்சிலம்பு முத்தாலே
முத்தாலே தண்டைகொஞ்ச முன்னாவாய்ப்பிள்ளையாரே
செல்வக்கணபதி நின் சீர்பாதம் நான்மறவேன்

## சரஸ்வதி துதி.

தாயே சரஸ்வதியே சங்கரியே முன்னடவாய்
என் தாயே கலைவாணி ஏகவல்லி நாயகியே
வாணி சரஸ்வதியே வாக்கில் குடியிருந்து
என்னாவில் குடியிருந்து நல்லோசை தாருமம்மா
கமலாசனத்தாளே காரடி பெற்றவளே
என்-குரலிற் குடியிருந்து கொஞ்சடி பெற்றவளே
என்-நாவு தவறாமல் நல்லோசை தாருமம்மா
மாரியம்மன் தன்கதையை மனமகிழ்ந்து நான்பாட
சரியாகவெந்நாவில் தங்கிக்குடியிரம்மா
கன்னனூர் மாரிமுத்தைக் கைதொழுது நான்பாட
பின்னமில்லாமல் பிறகிருந்து காருமம்மா



## மாரியம்மன் துதி.

---

மாயிமகமாயி மணிமந்திர சேகரியே
ஆயி உமையவளே ஆதிசிவன் தேவியரே
மாரித்தாய் வல்லியே மகாராணி வாருமம்மா
மாயன் சகோதரியே மாரிமுத்தே வாருமம்மா
ஆயன் சகோதரியே ஆஸ்தான மாரிமுத்தே
தாயே துரந்தரியே சங்கரியே வாருமம்மா

இக்கெல்லாம்போற்றும் எக்கலா தேவியரே
எக்கலாதேவியரே இக்கெலாம் நின்றசத்தி
கன்னபுரத்தாளே காரணசவுந்தரியே
காரணசவுந்தரியே நாரணனார் தங்கையம்மாள்
நாரணனார் தங்கையம்மாள் நல்லமுத்து மாரியரே
நல்லமுத்துமாரியரே நாககன்னி தாயாரே
உன்-காகம் பிறந்ததம்மா கன்னனூர் மேடையிலே
உன்-வேம்பு பிறந்ததம்மா விஜயநகர் பட்டணமாம்
உன்-சூலம் பிறந்ததம்மா துலங்குமணி மண்டபத்தில்
உன்-சிலம்பு பிறந்ததம்மா சிவாலிங்கப்பாறையிலே
உன் அலகு பிறந்ததம்மா அயோத்திநகர்பட்டணமாம்
உன்-பிரம்பு பிறந்ததம்மா பிச்சாண்டி சந்நிதியாம்
உன்-உடுக்கை பிறந்ததம்மா உருத்திராட்ச பூமியிலே
உன்.பம்பை பிறந்ததம்மா பளிங்குமா மண்டபத்தில்
உன்-கருத்து பிறந்ததம்மா கஞ்சகிரியிந்திராபுரம்
உன்-மருளர் தழைக்கவம்மா வையகங்களீடேற
உன்-குமாரவர்க்கந்தான் தழைக்க ொம்பனேயே மாரி
உனக்கு-மூன் றுகாகமம்மா மூத்தான நற்காகம் [முத்தே

உனக்கு-ஐந்துகரகமம்மா அசைந்தாடும்பொற்கரகம்
உனக்கு-ஏழுகரகமம்மா எடுத்தாடும் பொற்கரகம்
வேப்பிலையும்பொற்கரகம் வீதிவிளையாடிவர
ஆயிரங்கண் ணுடையாள் அலங்காரிவாருமம்மா
பதினாயிரங்கண் ணுடையாள் பராசத்திவாருமம்மா
துலுக்காணத்தெல்லைஎலாம் குலுக்காடப்பெண்ணானாய்
துலுக்காணத்தெல்லைவிட்டு துரந்தரியேவாருமம்மா
தாயேதுரந்தரியே சங்கரியே வாருமம்மா
மலையாளதேசமெல்லாம் விளையாடப்பெண்பிறந்தாய்
மலையாளதேசம்விட்டு வாருமம்மா இந்தமுகம்
சமைந்தாய்சமையபுரம் சாதித்தாய்கண்ணபுரம்
இருந்தாய்விராடபுரம் இனியிருந்தாய்கண்ணபுரம்
சமையபுரத்தாளே சாம்பிராணிவாசகியே
சமையபுரத்தெல்லைவிட்டுத் தாயாரேவாருமம்மா
கண்ணபுரத்தாளே காரணசவுந்தரியே
கண்ணபுரத்தெல்லைவிட்டுக் காரணியேவந்தமரும்
தடும்பாடிஎல்லையெல்லாம் காவல்கொண்டமாரிமுத்தே

ஊத்துக்காட்டமர்ந்தவளே உதிரபெலிகொண்டவளே
படவேட்டமர்ந்தவளே பரசுராமனைப்பெற்றவளே
படவேட்டைவிட்டுமெள்ள பத்தினியேவாருமம்மா
பெரியபாளையத்தமர்ந்த பேச்சியென்னும்மாரியரே
பெரியபாளையத்தைவிட்டுப் பேராசிவாருமம்மா
ஆரணிபெரியபாளையமா மதிலிருக்கும்ஆற்றங்கரை
ஆற்றங்கரையேடைவிட்டு ஆச்சியரேவாரும்மா
வீரம்பட்டணமமர்ந்த வேதாந்தமாரிமுத்தே
கோலியனூரெல்லையிலே குடிகொண்டமாரியரே
அந்தரத்தில்தேரோட அருகேசெடிலசைய
உச்சியில்தேரோட உயர்ந்தசெடிலசைய
மச்சியில்தேரோட மகரச்செடிலசைய
பக்கங்கயிறூட பாரச்செடிலசைய
ஆண்டகுருதேசிகரை அறியாதமானிடரை
தாண்டிவிட்டாட்டிவைக்கத் தோன்றினாய்நீயொருத்தி
சத்தியாய் நீயமர்ந்தாய் தனிக்குட்டிகாவுகொண்டாய்
எல்லையிலே நீயமர்ந்தாய் எருமைக்கிடாகாவுகொண்டாய்
உன்னைப்போல்தெய்வம் உலகத்தில்கண்டதில்லை

என்னைப்போல்பிள்ளைகள் எங்குமுண்டுவையகத்து
கோர்த்தமுத்துவடமசையக் கோலாகலத்துடனே
ஏற்றவர்க்குவரந்தருவாய் எக்கலாதேவியரே
எக்கலாதேவியரே இக்கெல்லாமாண்டவளே
இக்கெல்லாமாண்டவளே சிதம்பரியேவாருமம்மா
முக்கோணசக்கரத்தில் முதன்மையாய் நின்றசத்தி
அக்கோணந்தன்னைவிட்டு ஆச்சியரேவந்தமரும்
தாயேதுரந்தரியே சங்கரியேவாருமம்மா
மாயிமருளியரே மணிமந்திரசேகரியே
வல்லாண்மைக்காரியரே வழக்காடும்மாரிமுத்தே
வல்லவனைக்கொன்றாய் வலியவனைமார்பிளந்தாய்
நீலிகபாலியம்மா நிறைந்ததிருச்சூலியரே
நாலுமூலையோமகுண்டம் நடுவேகனகசபை
கனகசபைவீற்றிருக்கும் காரணசவுந்தரியே
காரணசவுந்தரியே நாரணனார்தங்கையரே
நாரணனார் தங்கையரே நல்லமுத்துமாரியரே
நடலைசுடலையம்மா நச்சுடலை தில்லைவனம்
தில்லைவனத்தெல்லைவிட்டு திரும்புமம்மா விந்தமுகம்

வார்ப்புச்சிலையாளே வச்சிரமணித்தோளே
தூண்டி துடைப் பெருமன் தூண்டிமுள் கைப்பெருமன்
மண்டையிலே தைத்தமுள்ளு மார்புருவிப்போகுதம்மா
பக்கத்தில்தைத்தமுள் பற்றித்துடிக்குதம்மா
தொண்டையில்தைத்தமுள்ளு தோளுருவிப்போகுதம்மா
கத்திபோல்வேப்பிலையைக் கதறவிட்டாய்லோகமெல்லாம்
ஈட்டிபோல்வேப்பிலையை இனிதணிந்துகொண்டவளே
பத்திரிக்குள்ளிருக்கும் பாவனையை யாரறிவார்
வேப்பிலைக்குள்ளிருக்கும் வித்தைதனையாரறிவார்
செடிலோ துடைப்பெருமன் தூண்டிமுள்ளு கைப்பெருமன்
தூண்டிமுள்ளைத் தூக்கித் துடுக்கடுக்குமாரிமுத்தே
ஒற்றைச்செடிலாட ஊரனைத்தும்பொங்கலிட
இரட்டைச்செடிலாட இரண்டணியும்பொங்கலிட
பக்கச்செடிலாட படைமன்னர்கொக்கரிக்க
பரமசிவன்வாசலிலே பாற்பசுவுகாவுகொண்டாய்
எமனுடவாசலிலே எருமைக்கிடாகாவுகொண்டாய்
எருமைக்கிடாகாவுகொண்டாய் எக்கலாதேவியரே

எக்கலாதேவியரே இக்கெல்லாமாண்ட சத்தி
காசிவள நாட்டாளே கன்னியாகுமரியாரே
காசிவள நாட்டைவிட்டுக் கட்டழகிவாருமம்மா
ஊசிவள நாடு உத்தியா குமரிதேசம்
அறியாதான்பாடுகிறேன் அம்மைதிருக்கதையை
தெரியாதான்பாடுகிறேன் தேவிதிருக்கதையை
எட்டென்றுவிரண்டறியே னேழையம்மாவுன்னடிமை
பத்தென்றுவொன்றறியேன் பாலனம்மாஉன்னடிமை
பாடவகையறியேன் பாட்டின்பயனறியேன்
வருந்தவகையறியேன் வர்ணிக்கப்போறியேன்
பேருமறியேனம்மா பெற்றவளே என்தாயே
குழந்தைவருந்துவதுன் கோவிலுக்குக்கேட்கிலையோ
மைந்தன்வருந்துவதுன் மாளிகைக்குக்கேட்கிலையோ
பாலன்வருந்துவது பாரபதியேகேட்கிலையோ
கோவிலடிமையம்மா கொண்டாடும்பாலகனடி
மாளிகையைவிட்டு நீ மாதாவே வாருமம்மா
சந்நிதியைவிட்டு நீ தாயாரே வாருமம்மா
அரண்மனையைவிட்டு நீ ஆத்தாளேவாருமம்மா

கோயிற்கிளைமயம்மா கொண்டாடும்பாலகண்டி
சன்னிதிமைந்தனம்மா சங்கரியேபெற்றவளே
வருந்தியழைக்கிறேனே வண்ணமுகங்காணாமல்
தேடியழைக்கிறேனே தேவிமுகங்காணாமல்
ஏழைக்குழந்தையம்மா எடுத்தோர்க்குப்பாலகண்டி
பாலன்குழந்தையம்மா பார்த்தோர்க்குப்பாலகண்டி
மைந்தன்குழந்தையம்மா மகாராசிகாருமம்மா
கல்லோடியுன்மனது கரையிலையோ எள்ளளவும்
இரும்போடியுன்மனது இரங்கிலையோ எள்ளளவும்
கல்லுங்கரைந்திடுமுன் மனங்கரையாதென்னவிதம்
இரும்புமுருகிடுமுன் இருதயமுருகாதென்னவிதம்
முன்செய்தீவினையோ முற்காலத்துப்பயனோ
பெரியோர்கள்செய்வினையோ பெற்றநீசொல்லுமம்மா
ஏதுமறியேனே ஈஸ்வரியேசொல்லுமம்மா
கடும்பாடியெல்லையிலே கட்டழகிவீற்றிருந்தாய்
கடும்பாடியெல்லைவிட்டுக் கட்டழகிவாருமம்மா
காகத்தழகியபே கட்டழகிமாரிமுத்தே
காகத்தாயிருந்து கட்டழகிகொஞ்சுமம்மா

குப்பத்தழகியம்மா கோபாலன் தங்கையரே
குப்பத்திலே இருந்து கொஞ்சுமம்மா பெற்றவளே
கொஞ்சுமம்மா பெற்றவளே குறைகளொன்றும் வாராமல்
உனக்கு-பட்டுப்பளபளெனப் பாடகக்கால் சேருட
உனக்கு-முத்துகலகலென மோதிரக்கால் சேருட
உலகமெல்லா முத்தெடுக்க உள்ளபடி தான்வந்தாய்
தேசமெல்லா முத்தெடுப்பாய் தேவிகன்னனூராளே
முத்தெடுத்துத் தான்புகுந்தாய் உத்தமியே மாரிமுத்தே
உனக்கு-ஈச்சங்குறக்கூடை இருக்கட்டும் பொன்னாலே
உனக்கு-தாழங்குறக்கூடை தனிக்கட்டும் பொன்னாலே
குறக்கூடை முத்தெடுத்துக் கொம்பனையே நீ புகுந்தாய்
கோயிலின் சந்தடியில் கூப்பிட்டால் கேட்காதோ
ஆரண்மனைச் சந்தடியில் அழைத்தாலுங் கேளாதோ
மாளிகையின் சந்தடியில் மாதாவே கேட்கிலையோ
மக்களிட சந்தடியோ மருமக்கள் சந்தடியோ
பிள்ளைகள் சந்தடியோ பேரன்மார் சந்தடியோ
ஆனந்தம் பெருமையோ ஆசாரச் சந்தடியோ
சந்தடியை நீக்கியம்மா தாயாரே வாருமம்மா

கொல்லிமலையாண்டவனைக் குமாரகுருபரனை
காத்தவராயனைத்தான் கட்டழகிதானழையும்
தொட்டியச்சின்னன் துரைமகனைத்தானழையும்
மதுரைவீரப்பனையென் மாதாவேதானழையும்
பாவாடைராயனைத்தான் பத்தினியேதானழையும்
கருப்பண்ணசுவாமியையும் கட்டழகிதானழையும்
சங்கிலிக்கருப்பனைத்தான் சடுதியிலேதானழையும்
மூத்தாளுராவுத்தன் முனையுள்ள சேவகரை
இச்சணமேதானழையும் என்தாயேமாரியம்மா
பெரியபாளையத்தமர்ந்த பேச்சியென்னுமாதாவே
பாளையக்காரியம்மா பகவதியேமாரிமுத்து
கலகலென நடனமிடும் கன்னனூர்மாரிமுத்தே
உன்னைப்பணிந்தவர்க்கு உற்றதுணை நீயிம்மா
ஆதிபரமேஸ்வரியே அருகேதுணையிரம்மா
உன்னைப்போல்தெய்வத்தை உலகத்தில்கண்டதில்லை
என்னைப்போல்மைந்தர்கள் எங்குமுண்டுவையகத்தில்
உன்-மகிமையறிந்தவர்கள் மண்டலத்தில்யாருமில்லை
உன்-சேதியறிவாரோ தேசத்துமானிடர்கள்

உன்மகிமைதானறிந்து உலகத்தில்பாடவந்தேன்
மகிமையறியாதுலகில் மாண்டமனுகோடியுண்டு
சேதியறியாதுலகில் செத்தமனுகோடியுண்டு
தப்புவினைவந்தாலும் சங்கரியே நீபொறுத்து
ஆறுதப்புநூறுபிழை அடியார்கள்செய்ததெல்லாம்
மனதுபொறுத்து மனமகிழ்ச்சியாகவேணும்
தேவிமனம்பொறுத்துத் தீக்கருடன்ராட்சியம்மா
கொண்டுமனம்பொறுத்துக் கொப்பனையேகாருமம்மா
கார்க்கக்கடனுக்குக் காரணசவுந்தரியே
காரடிபெற்றவளே காலுதலைநோகாமல்
வேணுமென்றுகாரடி நீ வேப்பஞ்சிலையாளே
பக்கத்துணையிருந்து பாலகனைக்காருமம்மா
பொரிபோலெழும்பி நீ பூரித்து ஆலித்து
ஆலித்து நீயெழும்பி ஆத்தாளிறங்குமம்மா
சிரசினில்முத்தையம்மா தற்காத்து நீயிறக்கு
முகத்தினிலமுத்தையம்மா முன்னைதாய் நீயிறக்கு
கழுத்தினில் முத்தையம்மா கட்டழகி நீயிறக்கு
தோளினில்முத்தையம்மா சுந்தரியே நீயிறக்கு

மார்பினில்முத்தையம்மா மாதாவே நீயிறக்கு
வயிற்றினில் முத்தையம்மா மகேஸ்வரி நீயிறக்கு
இடையினில்முத்தையம்மா தாயவளே நீயிறக்கு
கணுக்காலில்முத்தையம்மா காமாட்சி நீயிறக்கு
பாதத்தில்முத்தையம்மா பாரிலிறக்கிவிடும்
பூமியிலிறக்கிவிடு பெற்றவளேகாருமம்மா
பெற்றவளே தாயே யோரசிமாரிமுத்தே
உற்றதுணையிருந்து உகந்துமேகாருமம்மா
உன்னைவிடப்பூமிதனி லுற்றதுணைவேறுமுண்டோ
பக்கத்துணையிருந்து பாதுகாத்தாட்சியம்மா
செக்கச்சிவந்தவளே செங்கண்ணன் தங்கையரே
மங்கையென் னுமாதரசி மகராசிகாருமம்மா
திங்கள்வதனியரே தேவிகண்ணனூராளே
எங்கள் குலத்தேவியரே ஈஸ்வரியேகண்பாரும்
மங்களவினோதி மாதாவே கண்பாரும்
ஏழைக்கிரங்காமல் இப்படியே நீயிருந்தால்
வாழ்வதுதானெக்காலம் வார்ப்புச்சிலையாளே
ஆயிமகமாயி ஆரணஞ்சொல் காரணியே

மாயிமகமாயி மணிமந்திரசேகரியே
இரங்கிரங்குந்தாயாரே எங்களைக்காருமம்மா
மாரித்தாய்வல்லியே மகராசிவாருமம்மா
வீரணன்சோலையிலே ஆரணமதானசக்தி
நீதிமன்னர்வாசலிலே நேராய்க்கொலுவிருந்தாய்
கொலுவிருந்தசத்தியமே கோர்த்தது நீயிறக்கும்
கோர்த்தமுத்து நீயிறக்கும் கொம்பனையேமாரிமுத்தே
போட்டமுத்து நீயிறக்கும் பொய்யாதவாசகியே
பொய்யாதவாசகியே புண்ணியவதிஈஸ்வரியே
செடிலோதுடைப்பெருமன் சேகண்டிகைப்பெருமன்
அடங்காதமானிடரை ஆட்டிவைக்கும்மாரிமுத்தே
துஷ்டர்கள்தெண்டனிடத் துடுக்கடக்குமாரிமுத்தே
கண்டவர்கள்தெண்டனிடக் கலக்கமிடுமாரிமுத்தே
அண்டாதபேர்களைத்தா ஞஞுவத்தைத்தானடக்கி
இராஜாக்களெல்லோரும் நலமாகத்தான்பணிய
மகுடமுடிமன்னவர்கள மலரடியைத்தான்பணிய
கிரீடமுடிதரித்த கீர்த்தியுள்ள ராஜாக்கள்
மகுடமந்திரிகள்வந்து மண் ணுதெண்டனிட்டுநிற்க

பட்டத்துரைமக்கள் படைமுகத்துராஜாக்கள்
வெட்டிக்கெலித்துவரும் வேதாந்தவேதியர்கள்
துஷ்டர்களைத்தானடக்கும் சூலிகபாலியம்மா
அடங்காதமாளிடரை யடிமைபலிகொண்ட சத்தி
மிஞ்சிவரும்ராக்ஷதரை வெட்டிவிருதுண்டகண்ணே
தஞ்சமென்றமானிடரைத் தற்காக்கும்பராபரியே
அவரவர்கள் தான்பணிய ஆக்கினையைப்பெற்றவளே
சிவனுடனேவாதாடும் சித்தாந்தமாரிமுத்தே
[illegible]னுடனேவாதாடும் ஆஸ்தானமாரிமுத்தே
பிரமனுடன்வாதாடும் பெற்றவளேமாரிமுத்தே
விஷ்ணுவுடன்வாதாடும் வேதாந்தமாரிமுத்தே
இயமனுடன்வாதாடும் எக்கலாதேவியரே
தேவருடன்வாதாடும் தேவிகன்னனூராளே
கண்ணபுரத்தாளே காரணசவுந்தரியே
காரணசவுந்தரியே கர்த்தனுடதேவியரே
நெருப்பம்மா நின்சுரூபம் நிஷ்டூரக்காரியரே
அனலய்யா நின்சுரூபம் ஆஸ்தானமாரிமுத்தே
தணலம்மா நின்சுரூபம் தரிக்கமுடிபோகாது

அண்டாநெருப்பேயம்மா ஆதிபரமேஸ்வரியே
காத்தாயைப்பெற்றவளே கட்டழகிமாரிமுத்தே
தொட்டியத்துச்சின்னான் தொழுதுவரப்பண்ணுசத்தி
கருப்பனையுங்கூடவேதான் கண்டுபணியவைத்தாய்
பெண்ணாசிக்காகப் பிள்ளையைக்கழுவில்வைத்தாய்
அடங்காதபிள்ளையென்று அதட்டிக்கழுவில்வைத்தாய்
துஷ்டனென்றுசொல்லித் துரத்திக்கழுவில்வைத்தாய்
பாரினில்முத்தையம்மா பத்தினியேதாயாரே
வாரியெடுக்கவொரு வஞ்சியரையுண்டுபண்ணாய்
முத்தெடுக்குந்தாதி மோகனப்பெண்ணேயென்று
தாதியரைத்தானழைத்துத் தாயாரேமுத்தெடுத்தாய்
முத்தெடுத்துத்தான்புகுந்த உத்தமியாள்மாரிமுத்தே
மாயிமகமாயி மணிமந்திரசேகரியே
ஆயிவுமையவளே ஆஸ்தானமாரிமுத்தே
பாரமுத்தை நீயிறக்கிப் பாலகனைக்காருமம்மா
காரடிபெற்றவளே காலுதலைநோகாமல்
சொற்கேளாப்பிள்ளைஎன்று தூண்டிக்கழுவில்வைத்தாய்

கமுதனக்குமோர்வார்க்கக் கட்டழகியுண்டுபெண்ணாய்
நல்லதங்காளுண்டுபெண்ணாய் நற்கழுவுமோர்வார்க்க
உரியில்தயிர்வார்க்க உத்தமியேஉண்டுபெண்ணாய்
அருமகனைக்காத்தாற்போல் அடிமையைக்காருமம்மா
எவ்வளவுநேரமம்மா எடுத்துப்பாருமம்மா
கடிகளவுநேரமம்மா கண்பார்க்க வேணுமம்மா
கடைக்கண்ணால் நீபார்த்தால்கடைத்தேறிப்போகேனே
பாரளந்தோன் தங்கையரே பாலகனைக்காருமம்மா
பேராசிமாரிமுத்தே பிள்ளைகளைக்காருமம்மா
மகமாயிமாரிமுத்தே மைந்தர்களைக்காருமம்மா
பெற்றவளேமாரிமுத்தே பிள்ளைகளைக்காருமம்மா
ஆணழகிமாரிமுத்தே அடிமைகளைக்காருமம்மா
பூணாம்பூண்டசத்தி பிள்ளைகளைக்காருமம்மா
பாரமெடுக்கவம்மா பாலகனாலாகுமோதான்
பூணாரந்தானெடுக்கப் பிள்ளைகளாலாகுமோதான்
வருத்தப்படுத்தாதே மாதாவேகண்பாரும்
பாலன்படுந்துயரம் பாக்கியவதிபார்க்கிலையோ
மைந்தன்படுந்துயரம் மாதாவேபார்க்கிலையோ

குழந்தைபடுந் துயரம் கொம்பனையேபார்க்கிலையோ
சிற்றடிகள்படுந் துயரம் ஸ்ரீதேவியரேபார்க்கிலையோ
பூணாமுத்திரையைப் பெற்றவளேதானிறக்கும்
ஆபாணமுத்திரையை ஆத்தாளிறக்குமம்மா
இரங்கிரங்குந்தாயாரே எங்களைக்காப்பாற்றுமம்மா
அடிமைகளைக்காப்பாற்றி யாணழகி நீயிறக்கும்
கும்பத்துமாரியம்மா கொலுவிலலங்காரியரே
கொலுவிலலங்காரியரே கோர்த்தமுத்து நீயிறக்கும்
கோர்த்தமுத்து நீயிறக்கும் கொம்பனையேமாரிமுத்தே
மாரிமழைபொழிவாய் தேவியேதேன்சொரிவாய்
தேவியென்றால்தேன்சொரியும் திரிபுரசுந்தரியே
திரிபுரசுந்தரியே தேசததுமாரியம்மா
பொன்னுமுத்துமாரியரே பூரணசவுந்தரியே
தாயாரேபெற்றவளே சத்தகன்னிருத்திரியே
பேருமறியேனம்மா பெற்றவளேதாயாரே
குருடனைக்கோலென்று கொம்பனையே நீயறிவாய்
கோலைப்பிடுங்கிக்கொண்டால் குருடன்பிழைப்பானோ
இப்படிக்கு நீயிருந்தா லினிப்பிழையோமதாயாரே

கலிபிறக்குமுன்பிறந்த கனத்ததோர்மாரிமுத்தே
யுகம்பிறக்குமுன்பிறந்த யுத்தண்டமாரிமுத்தே
கலியுகத்தில்மெய்யான கண்கண்டதேவதை நீ
உன்னைப்போல்தெய்வம் உலகத்தில்கண்டதில்லை
என்னைப்போல்மைந்தர் தானெங்குமுண்டோவையகத்தில்
அனலைமதியாய் நீ யாவரையுஞ்சட்டைபண்ணாய்
புனலைமதியாய் நீ பூலோகஞ்சட்டைபண்ணாய்
வருந்தியழைக்கிறேனுன் வண்ணமுகங்காணாமல்
தேடியழைக்கிறேனுன் திருமுகத்தைக்காணாமல்
பாலகனைக்காத்துப் பாதத்தாலுதைத்துவிடு
மைந்தனைக்காத்து மகராசியுதைத்துவிடு
ஆதிபராஞ்சோதி அங்குகண்ணேவாருமம்மா
வெள்ளிக்கிழமையிலே கொள்ளிக்கண்மாரியமே
வெள்ளியிலுந்திங்களிலும் வேண்டியபேர்பூசைசெய்ய
பூசைமுகத்திற்குப் போனேனென்றுசொல்லாதே
இந்தமனையிடத்தில் ஈஸ்வரியேவந்தருள்செய்
வந்தமனைவாழுமம்மா இருந்தமனையீடேறும்

இருந்தமனேயீடேற ஈஸ்வரியே கண்பாரும்
கண்பாரும்பிள்ளையைக் கனகவல்லித்தாயாரே
நண்பானபிள்ளைகளை நலித்திட நீசெய்யாதே
உன்னைநம்பினோரை ஓய்ந்துவிடச்செய்யாதே
அந்நீதஞ்செய்யாதே ஆயிமகமாயியம்மா
வேம்புரதமேறிப் பார்வதியேவாருமம்மா
பச்சிலைரதமேறிப் பார்வதியேவாருமம்மா
கொலுவிலிருந்தசத்தி கோர்த்தமுத்தை நீயிறக்கு
போட்டமுத்தை நீயிறக்கு பூலோகமாரிமுத்தே
கேளிக்கையாகக் கிளிமொழியே முத்திறக்கு
அரும்பாலகன்தன்னை அவதிப்படுத்தாதே
வருத்தப்படுத்தாதே மாதாவேகண்பாரும்
அன்னமிரங்கவம்மா ஆத்தாளேகண்பாரும்
ஊட்டத்தை நீகொடுத்து உத்தமியேகாருமம்மா
உறங்கக்கொடுத்து நீ உத்தமியேகாருமம்மா
காருமம்மாபெற்றவளே கவலைதோகாமல்
எங்கையோபராமுகமா யிருந்தேனென்று சொல்லாதே
அந்திசந்திபூசையிலே அசதியாயெண்ணாதே

ஒட்டாரம்பண்ணுதே ஓங்காரமாரிமுத்தே
பாவாடம்சேருமம்மா பழிகள்வந்துநேருமம்மா
பாவாடம்சேர்ந்ததென்றால் பாருலகுக்காகாது
கண்டார்நகைப்பார்கள் கலியுகத்தாரேசுவார்கள்
கலியுகத்தாரேசுவார்கள் கட்டழகிமாரிமுத்தே
பார்த்தார்நகைப்பார்கள் பரியாசம்பண்ணுவார்கள்
உதடுபடைத்தவர்கள் உதாசினங்கள் சொல்லுவார்கள்
பல்லுபடைத்தவர்கள் பரியாசம்பண்ணுவார்கள்
நாவுபடைத்தவர்கள் நாணயங்கள் சொல்வார்கள்
பார்த்தார்நகைக்கவரும் பரியாசம்பண்ணுதே
கச்சிப்பதியாளே காமாச்சித்தாயாரே
தாயாரேபெற்றவளே தயவுவைத்துக்காருமம்மா
மாதாவேபெற்றவளே மனம்பொறுத்துக்காருமம்மா
பார்வதியேபெற்றவளே பக்ஷம்வைத்துக்காருமம்மா
ஆயிரங்கண்ணுடைய அலங்காரிவாருமம்மா
பதினாயிரமுத்தினிலே நூற்றெடுத்த ஆணிமுத்து
ஆயிரங்கண்முத்துதனிலாத்தாள்வளர்த்தெடுத்தாள்

நாகத்தின்கண்ணேயம்மா நல்லவிடைப்பாம்பே
சேஷத்தின்கண்ணேயம்மா சின்னவிடைப்பாம்பே
அஞ்சுதலைநாகமுனைக் கொஞ்சிவிளையாடுதம்மா
பத்துதலைநாகமம்மா புரளுதம்மா நின்கொலுவில்
செந்தலைநாகமம்மா சேர்ந்துவிளையாடுதம்மா
கருந்தலைநாகமம்மா காக்குதம்மா நின்கோவில்
சேஷனென்றபாம்பையெல்லாம் சேரவேபூண்டசத்தி
நாகமென்றபாம்பையெல்லாம் நலமாகப்பூண்டசத்தி
அரவமெனும்பாம்பைஎல்லா மழகாகப்பூண்டசத்தி
ஆபரணமாய்ப்பூண்டாய் அழகானபாம்பைஎல்லாம்
நாகங்குடைபிடிக்க நல்லபாம்புதாலாட்ட
பூரணமாய்ப்பூண்டாயுன் பொன்னாதிருமேனி
தாலாட்டத்தாலாட்டத் தாயார்மனமிரங்கு
சேஷன்குடைகவியச் செந்நாகம்வட்டமிட
வட்டமிட்டுவீற்றிருக்க மாரிகன்ன னூராளே
மார்மேலேநாகமம்மா மடிமேற்புரண்டாட
தோள்மேலேநாகமம்மா துடைமேற்புரண்டாட
மார்மேலுந்தோள்மேலும் வண்ணமடிமேலும்

கொஞ்சிவிளையாடுதம்மா கோபாலன் தங்கையரே
எழையாலாகுமோதான் ஈஸ்வரியைத்தோத்தரிக்க
பஞ்சையாலாகுமோதான் பத்தினியைத்தோத்தரிக்க
குழந்தையாலாகுமோதான் கொண்டுனைத்தோத்தரிக்க
அடியனாலாகுமோதான் ஆத்தாளைத்தோத்தரிக்க
எந்தனாலாகுமோதான் ஈஸ்வரியைத்தோத்தரிக்க
இல்லையென்பார்பங்கிலிரு ஈஸ்வரியேமாரிமுத்தே
நில்லாமைநாழி நிஷ்டூரத்தாண்டவியே
உண்டென்பார்பங்கில் ஒளிவிளக்காய் நின்றசத்தி
பாத்தோர்க்குச்செல்வனம்மா பாலன்குழந்தையம்மா
உன்னைப்பணைத்தவர்க்கு உருமார்பிலாணியர்மா
நினைத்தோர்க்குத்தெய்வமம்மா எதிர்த்தார்க்கு நீயாணி
தாயே நீகாருமம்மா தருபையாய் நின்றசத்தி
வாக்கிட்டால்தப்பாது வரங்கொடுத்தால்பொய்யாது
பொய்யாதுபொய்யாது பூமலர்தான்பொய்யாது
பூவிரண்டுபூத்தாலும் நாவிரண்டும்பூக்காது
மறவரிடவாசலிலே மல்லிகைப்பூபூத்தாலும்
மறவாறிவாரோ மல்லிகைப்பூவாசனையை

குறவரிட வாசலிலே கூட மல்லிபூத்தாலும்
குறவரறிவாரோ கூட மல்லிவாசனையை
பன்றிமுதுகினிலே பன்னீரைப்பூசினுக்கால்
பன்றியறியுமோதான் பன்னீரின்வாசனையை
என்னுலேயாகுமோதான் ஈஸ்வரியை நமஸ்கரிக்க
மைந்தனுலாகுமோதான் மாதாவை நமஸ்கரிக்க
பிள்ளையினுலாகுமோதான் பெற்றவளை நமஸ்கரிக்க
குழந்தையாலாகுமோதான் கொம்பனையை நமஸ்கரிக்க
பாலனுலாகுமோதான் பார்வதியை நமஸ்கரிக்க
எச்சிலொருகோடி இளந்தீட்டுமுக்கோடி
தீட்டுமொருகோடி தெருவெங்குந்தானுமுண்டு
கன்னிகள் தீட்டு கலந்தோடிவந்தாலும்
ஆறுதப்புநூறுபிழை அடியார்கள்செய்தாலும்
தாயேமனம்பொறுத்துத் தணஞ்செயலைக்காருமம்மா
எச்சிற்கலந்ததென்று இடையிற்போய்நிற்காதே
தீட்டுக்கலந்ததென்று தூரப்போய்நிற்காதே
தீட்டுக்கலந்தாலும் தேவிமனம்பொறுத்து
எச்சிற்கலந்தாலும் ஈஸ்வரியேமனம்பொறுத்து

பக்ஷம் வைத்துக்காருமம்மா பராபரியே அங்குகண்ணே
விருப்பம் வைத்துக்காருமம்மா விருதுபடைத்தசத்தி
ஐந்துவிருதைப்படைத்த ஆணழகிமுத்திறக்கு
அஷ்டவிருதைப்படைத்த ஆச்சிமுத்தழித்துவிடு
தசவிருதைப்படைத்த தற்பரிமுத்தழித்துவிடு
பூணூரந்தான் கழட்டிப் பெற்றவளே காருமம்மா
நீலிகபாலியம்மா நிறைந்தபஞ்சாக்ஷரியே
சூலிகபாலியம்மா நிறைந்தபஞ் சாக்ஷரியே
திஷ்டூரக்காரியரே விஸ்தாரமுள்ளசத்தி
வேப்பிலையால்தான் தடவி விசிறிமுத்தழித்துவிடு
ஆனபராசத்தியரே அம்மையேமுத்தழித்துவிடு
இரங்கிரங்குந்தாயாரே ஈஸ்வரியேநான்பிழைக்க
படவேட்டமர்ந்தவளே பரசுராமனைப்பெற்றவளே
ஊத்துக்காட்டமர்ந்தவளே உதிரபெலிகொண்டவளே
வீராம்பட்டணமமர்ந்த வேதாந்தமாரிமுத்தே
சமைந்தாய்சமையபுரம் சாதித்தாய்கன்னபுரம்
கன்னபுரத்தெல்லையிலே காவல்கொண்டமாரிமுத்தே
எக்கலாதேவியரே ஈஸ்வரியேயிரங்குமம்மா

திக்கெல்லாம்பேர்படைத்த தேசத்துமாரியரே
அண்டபுவனமெல்லாம் ஆண்டுவருகின்றசத்தி
கச்சிப்பதியாளே காமாட்சித் தாயாரே
கயிலாசலோகமெல்லாம் காவல்கட்டியாண்டவளே
பாதாளலோகமெல்லாம் பரதவிக்கப்பண்ணசத்தி
காலைக்கொலுவிலம்மா காத்திருந்தாராயிரம்பேர்
உச்சிக்கொலுவிலம்மா உகந்திருந்தாராயிரம்பேர்
அந்திக்கொலுவிலம்மா அமர்ந்திருந்தாயிரம்பேர்
சட்டியக்காரரெல்லாம் கலந்தெச்சரிக்கைபண்ண
பாடும்புலவரெல்லாம் பண்பிசைந்தபாடல்சொல்ல
வடுகர் துலுக்கரோடு மராட்டியர்கன்னடியர்
கன்னடியர்காவலுடன் கர்ணாட்டுப்பட்டாணியர்
இட்டசட்டைவாங்காத இடும்பரெல்லாங்காத்திருக்க
போட்டசட்டைவாங்காத பொந்திலியர்காத்திருக்க
வடுகர் துலுக்கரம்மா மறுதேசப்பட்டாணி
வேடிக்கைபார்த்திருந்தார் வேப்பஞ்சிலையாளே
வேளிக்கைபார்த்திருந்தார் கிளிமொழியாள்மாரிமுத்தே
மாயமெல்லாமுன்மாயம் மருளெல்லாமுன்மருளாம்

மருளர் தழைக்கவம்மா மருமக்கள் ஈடேற
பெலிச்சட்டி தானெடுக்கும் பிள்ளைகள் தான் தழைக்க
வேதங்கள் தான் தழைக்க வானவர்கள் ஈடேற
குமாரவர்க்கந் தான் தழைக்கக் கொம்பனையே கண்பாரும்
மைந்தர்கள் தான் தழைக்க மாதாவே கண்பாரும்
காஞ்சிபுரியிலே தான் கர்த்தரையும் நீ நினைத்து
கர்த்தரையும் நீ நினைத்துக் காமாட்சி பூசைபண்ணாய்
கங்கை முழுகியம்மா கனிமொழியே தவமிருந்தாய்
வைகை முழுகியம்மா வனமயிலே தவமிருந்தாய்
பொய்கை முழுகியம்மா பெற்றவளே தவமிருந்தாய்
தவத்தின் மிகுந்தவளே சத்தகன்னித் தாயாரே
ஆற்றுமணலெடுத்து அரனாரையுண்டுபண்ணாய்
சேற்றுமணலெடுத்துச் சிவனாரையுண்டுபண்ணாய்
கம்பைநதியிலே காமாட்சி தவமிருந்தாய்
இருநூற்றுக்காதவழி திருநீற்றுக்கோட்டையிட்டாய்
திருநீற்றுக்கோட்டையிட்ட சிதம்பரியே மாரிமுத்தே
அருணாசலந்தனிலே ஈசான்யமூலையிலே
திருவண்ணாமலையிலென் தேவி தவமிருந்தாய்

அருணாசலந்தனிலே ஆத்தாள் தவமிருந்தாய்
ஈசான்யமூலையிலே இருந்தாய்பெருந்தவசு
இருந்தாய்பெருந்தவசு இடப்பாகப் பேருபெற்றாய்
இடப்பாகம்பேருபெற்ற ஈஸ்வரியேமாதாவே
காகமுதுகினிலே கதம்பப்பொடிபூசிவைத்தால்
காகமறியுமோதான் கதம்பப்பொடிவாசனையை
கொக்குமுதுகினில் கோமேதகங்கட்டிவைத்தால்
கொக்குமறியுமோதான் கோமேதகத்தின்பெருமை
நாயினகழுத்தினிலே நல்லமணிகட்டிவைத்தால்
நாயுமறியுமோதான் நல்லமணிநாணயத்தை
மூலக்கனலினிலே முதன்மையாய்நின்றசத்தி
பாலனுக்குவந்த பாலவரிச்சல்களில்
காலெரிவுகையெரிவு கட்டாறகிவாக்குமம்மா
குத்தல்குடைச்சல் சூலைமாரிநோவு
மண்டைக்குடைச்சலொடு மாரடைப்புத்தலைநோவு
வெதுப்பித்தப்பசீதசுரம் வல்லிணியையவாங்குமம்மா
இடுப்புக்குடைச்சலைத்தா னீஸ்வரியேவாங்குமம்மா
பித்தஎரிவுகளைப் பெற்றவளேவாங்குமம்மா

கழுத்துவலியதனைக் கட்டழகிவாங்குமம்மா
பத்திரியால்தான் தடவிப் பாரமுத்தழித்துவிடு
விபூதியைப்போட்டு இறக்கிவிடுமுத்திரையை
வேப்பிலைபட்டவிடம் வினைகள்பறந்தோடுமம்மா
பத்திரிபட்டவிடம் பாவம்பறந்தோடுமம்மா
விபூதிபட்ட தக்ஷணமே வினைகள்பறந்தோடுமம்மா
பஞ்சாக்ஷரம்பட்டால் பாவங்கள் தீர்ந்துவிடும்
பத்தென்றுவிரண்டறியேன் பாலனம்மா நின்னடிமை
எட்டென்றுவிரண்டறியேன் ஏழையம்மா நின்னடிமை
நாகத்தின்கண்ணேயம்மா நல்லவிடைப்பாம்பே
சேஷத்தின்கண்ணேயம்மா சின்னவிடைப்பாம்பே
பாம்பேதலைக்கணைதான் படுக்கும்பாய்பொன்னூலே
வேம்பேதலைக்கணைதான் வேப்பிலையேபஞ்சுமெத்தை
வேப்பம்பாலுண்டவளே வேதாந்தமாரிமுத்தே
ஐநூறுபாம்புனக்கு ஒளிவிட்ட வீரஜடை
முந்நூறுபாம்புனக்கு முடிந்துவிட்ட வீரஜடை
வீரஜடைமேலிருந்து மெல்லியரேகொஞ்சுமம்மா
முத்தூழுசந்தி முதற்சந்தியுன்னதென்றாய்

நானூறுசந்தி நடுச்சந்தியுன்னதென்றாய்
சந்திக்குச்சந்தி தனிச்சந்தியுன்னதென்றாய்
வீதிக்குவீதி வெளிச்சந்தியுன்னதென்றாய்
பட்டத்தழகியம்மா படைமுகத்துராசகன்னி
கன்னபுரத்தாளே காரணசவுந்தரியே
திருவிளக்குநாயகியே தேவிகன்னனூராளே
மணிவிளக்கின்மேலிருந்து மாதாவேகொஞ்சுமம்மா
விளக்கிற் குடியிருந்து மெல்லியரே கொஞ்சுமம்மா
திருவிளக்கின்மேலிருந்து செல்வியே கொஞ்சுமம்மா
கொஞ்சுமம்மா பெற்றவளே கோபாலன் தங்கையரே
சிரித்தார்முகத்தையம்மா செல்லரிக்கக்கண்டிடுவாய்
பரியாசஞ் செய்தவரைப் பல்லைப்பிடுங்கி வைப்பாய்
உதாசினம்சொன்னவரை யொருகண்கெடுத்திடுவாய்
மூலைவீட்டுப்பெண்டுகளை முற்றத்திலாட்டிடுவாய்
அரண்மனைப் பெண்டுகளை அம்பலத்திலாட்டிடுவாய்
பாப்பாரப் பெண்களைத்தான் தோற்பாதங்கட்டிடுவாய்
தோற்பாதங்கட்டிடுவாய் துரந்தரியே மாதாவே
நடுவீதிகொள்ளிவைத்து நானறியேனென்றிடுவாய்

கண்டவீதிகொள்ளிவைத்துக் காணுது நின்றிடுவாய்
கடியாவிஷம்போலே கடிக்கவிட்டுப்பார்த்திருப்பாய்
தீண்டாவிஷம்போலே தீண்டவிட்டு நீபார்ப்பாய்
பாம்புகண்ணி நீலியம்மா பழிகாரி மாரிமுத்தே
தாயே துரந்தரியே சர்வலோக மாதாவே
ஆருத கோபமம்மா ஆச்சியரே விட்டுவிடு
கடலில் முழுகியிப்போ கடுக நீ வாருமம்மா
காவேரி தான்முழுகிக் காமாட்சி வாருமிங்கே
வந்தமனைவாழுமம்மா இருந்தமனை யீடேறும்
கஞ்சாவெறியன் கனவெறியன் பாவாடை
சாராயவெறியன் தனிவெறியன் பாவாடை
பாவாடை ராயனைத்தான் பத்தினியே தானழையும்
தாயாரும்பிள்ளையுமாய்த் தற்காக்கவேணுமம்மா
மாதாவும் பிள்ளையுமாய் மனதுவைத்துக் காருமம்மா
ஆத்தாளும்பிள்ளையுமாய் அன்புவைத்துக்காருமம்மா
காரடிபெற்றவளே காலுதலை நோகாமல்
காசிவள நாட்டைவிட்டுக் காரணியே வந்தமரும்
ஊசிவள நாட்டைவிட்டு உத்தமியே வந்தமரும்

பம்பை முழங்கிவரப் பறமேளமார்ப்பரிக்க
சிற்றுடுக்கை கொஞ்சிவரச் சிறுமணிகளோலமிட
வேடிக்கை பார்த்திருந்தாள் வேப்பஞ்சிலையாளும்
கேளிக்கை பார்த்திருந்தாள் கிள்ளைமொழிமாரிமுத்து
சமையபுரத்தாளே சாம்பிராணி வாசகியே
மூக்கோணத்துள்ளே முதன்மையாய் நின்றசக்தி
நாற்கோணத்துள்ளிருக்கும் நல்லமுத்து மாரியரே
பஞ்சாக்ஷரப் பொருளே பார்வதியே பெற்றவளே
அறுகோணத்துள்ளிருக்கும் ஆதிபரமேஸ்வரியே
அஷ்டாக்ஷரப் பொருளே ஆனந்த மாரிமுத்தே
நாயகியேமாரிமுத்தே நாரணனார் தங்கையரே
நாரணனார் தங்கையரே நடனமிடும் பார்வதியே
ஐம்பத்தோரக்ஷரியே ஆதிசிவன் தேவியரே
ஆதிசிவன் தேவியரே அம்மை முத்துமாரியரே
பேருலக ரக்ஷகனும் பெருமாளுடன்பிறப்பே
பெருமாளுடன் பிறந்து பேருலகை யாண்டவளே
மாயனுடன் பிறந்து மண்ணுலகை யாண்டவளே
ஆயனுடன் பிறந்து அம்மைமுத்தாய் நின்றவளே

திரிகோணத்துள்ளிருக்கும் திரிபுர சுந்தரியே
ஆருதாரப்பொருளே அபிஷேகப் பத்தினியே
மூலாதாரப்பொருளே முன்பிறந்த தேவதையே
தாயே துரந்தரியே சர்வலோகேஸ்வரியே
பத்திரியால்தான் தடவிப் பாரமுத்தைத்தானிறக்கும்
வேப்பிலையால்தான் தடவி மெல்லியரே முத்திறக்கும்
மேனியெல்லாந்தான் தவிர விளையாடி முத்திறக்கும்
இரங்கிரங்குந் தாயாரே எங்களைக்காப் பாற்றுமம்மா
முத்திலுமுத்து முகத்திலிடு மணிமுத்து
எங்கும நிறைந்தமுத்து எல்லோர்க்கும் மாரிமுத்து
பெண்ணாய்ப் பிறந்து பேருலகை யாளவந்தாய்
பேருலகை யாளவந்த பெண்ணரசி மாரிமுத்தே
நித்தம்பராமரிக்க நிஷ்டூரி நீபிறந்தாய்
தேசம் பராமரிக்கத் தெய்வகன்னி நீ பிறந்தாய்
கிளியேந்தும் நாயகியே கிளிமொழியே தாயாரே
நித்தியகல்யாணி நீலிபரஞ்சோதி
அம்மணி பார்வதியே ஆணிமுத்துத் தாயாரே
லோகமெல்லாமுத்தளக்கும் லோகபரமேஸ்வரியே

வெற்றிக்கொடிபறக்க விருதுபம்பைதான் முழங்க
எக்காளந்தானூத எங்குங்கிடுகிடென்ன
பஞ்சவர்ணடால்விருது பக்கமெல்லாஞ் சூழ்ந்துவர
நாகசுரமேளம் நாட்டியங்களாடிவர
தப்பட்டைமேளந் தவின்முரசு தான்முழங்க
காளங்களூதிவரக் கவிவான ரெச்சரிக்க
சின்னங்களூதிச் சிறப்பாய்க் கொடிபறக்க
ஜண்டாசிலர்பிடிக்கத் தனிமுரசு தானடிக்க
கொடிகள்சிலர்பிடிக்கக் கொக்கரிப்பார் வீரமக்கள்
தாமரைகள் தான்வீசச் சந்திப்பார் வீரமக்கள்
தாரையாம் பூரிசின்னம் தனித்தனி யாய்முழங்க
தக்கையுடுக்கைகளும் தவிலோடு பம்பைகளும்
மிக்கதவண்டைகளும் மிருதங்கந் தான்முழங்க
நன்குமடியுஞ்சுதியும் நன்றாக வூதிவர
தம்புருவீணை தக்கபடி வாசிக்க
பம்பை யடித்துவரப் பறமேளந்தானதிர
கென்செட்டுவாத்தியமும் கிளார்நெட்டு வாத்தியமும்
கொடிவாத்தியம்புதிதாக் கொண்டுவந்தாருந்தனக்கு

இத்தனைவாத்தியமும் இசைகின்றார் பாருமம்மா
பார்த்துக்குளிருமம்மா பாங்கான உன்மனது
கண்டு குளிருமம்மா கல்லான உன் மனது
எப்படியாகிலுந்தான் ஏழைகளை மீட்டேற
கண்பாரும் பாருமம்மா காரண சவுந்தரியே
இந்திரனுக்கொப்பா யிலங்குமகமாரியரே
கும்பத்தழகியம்மா கொலுமுகத்து ராசகன்னி
சகலகுற்றம்சகலபிழை தாயாரே நீ பொறுத்தாய்
வணங்குகின்ற மக்களுக்கு வாழ்வுமிகவளிப்பாய்
ஓங்கார ரூபியென்று உன்னையே தோத்தரிக்க
படைவெட்டிவீற்றிருக்கும் பரஞ்சோதித்தாயாரே
ஆரறிவாருண்மகிமை ஆணிமுத்துத் தாயாரே
அண்டபுவனமெல்லாம் அம்மாவுனைத்தொழுவார்
தேசங்களெங்குந் தேவியைத் தோத்தரிப்பார்
எள்ளுக்குளெண்ணெய்போல் எங்குந்நிறைந்தசத்தி
எங்கும் நிறைந்தவளே எல்லோர்க்குந்தாயாரே
அஞ்சலென்றசத்தமொடு அடியார்தமைக்காக்க
வேப்பிலையுங்கையும் விபூதியெங்குந் தூளிதரும்

கருணைகடாக்ஷம்வைத்துக் காக்குமகமாயியுந்தன்
சரணாரவிந்தமதைத் தந்தருளுமாரிமுத்தே
உன்பேர் நினைத்தால்பில்லி பிசாசுபறந்தோடுமம்மா
சூனியம்வைப்புஞ் சுழன்று அலைந்தோடிவிடும்
பாதாளவஞ்சகமும் பறக்கும்உன்னை நினைத்தால்
கரகத்தில் வீற்றிருக்கும் கன்ன னூர் மாரிமுத்தே
சத்துகன்னிமாதாவே சங்கரியே யென்மணியே
சூலங்க பாலமுடன் துய்ய டமரகமும்
ஓங்கார ரூபமம்மா ஒருவ ரறிவாரோ
மகிமை யறிவாரோ மானிடர்கள் யாவருந்தான்
அடியார் தமைக்காக்கு மந்தரி நிரந்தரியே
அடியார்கள்செய்தபிழை யாச்சியரே நீபொறுப்பாய்
கோயிலடிமையம்மா கொண்டாடும் பாலகன்நான்
சன்ன திப்பிள்ளையைத்தான் தற்காரும் பெற்றவளே
உன்னையல்லால்வேறு துணைஒருவர் காணேனம்மா
வருந்துவார் பங்கில் வலமாய்க் குடியிருப்பாய்
பாவாடைக்காரி பராபரியே அங்குகண்ணே
உன் னுகிறதேவதைக ளுடுத்அகிறதேவதைகள்

கட்டுப்பட்ட தேவதைகள் காக்கின்ற தேவதைகள்
இந்தமனையிடத்தில் விருந்துண்ணுந்தேவதைகள்
சாம்பிராணி தூபத்திற் குட்பட்ட தேவதைகள்
அனைவோரும்வந்திருந்து அன்பாயெமைக்காரும்
ஓராம்படித்தளமாம் ஓலைப்பூ மண்டபமாம்
ஓலைப்பூ மண்டபத்தி லுகந்துகொலுவிருந்தால்
இரண்டாம்படித்தளமாம் இரத்தின சிம்மாதனமாம்
இரத்தினசிம்மாதனத்தி விருந்தரசுதான்புரிவாள்
மூன்றாம்படித்தளமாம் மூலைமுகப்புச் சாலைகளாம்
மூலைமுகப்புச்சாலைகளில் மூந்திக்கொலுவிருந்தால்
நான்காம்படித்தளமாம் நவரத்தின மண்டபமாம்
நவரத்தின மண்டபத்தில் நாயகியும் வந்தமர்ந்தாள்
ஐந்தாம்படித்தளமாம் அழுத்திய சிம்மாதனமாம்
அழுத்திய சிம்மாதனத்தி லாயிகொலுவிருந்தாள்
ஆறாம்படித்தளமாம் அலங்காரச் சாவடியாம்
அலங்காரச்சாவடியில் ஆச்சியரும் வந்திருந்தாள்
ஏழாம்படித்தளமாம் எழுதியசிம்மாதனமாம்
எழுதிய சிம்மாதனத்தில் ஈஸ்வரி வந்திருந்தாள்

எட்டாம்படித்தளமாம் விஸ்தாரமேடைகளாம்
விஸ்தாரமேடைதனில் விமலியரும்வந்தமர்ந்தாள்
ஒன்பதாம்படித்தளமாம் ஒருமுகமாய்நின்றசத்தி
ஒருமுகமாய்நின்றசத்தி உத்தமியுங்கொலுவிருந்தாள்
பத்தாம்படித்தளமாம் பளிங்குமாமண்டபமாம்
பளிங்குமாமண்டபத்தில் பத்தினியும்வந்திருந்தாள்
ஆத்தாள்கொலுவிலேதான் ஆரார்கொலுவிருந்தார்
ஐங்கரனும்வல்லவையும் அன்பாய்க்கொலுவிருந்தார்
தொந்திவயிற்றோனுந் துந்துபியுங்கொலுவிருந்தார்
குழந்தைவடிவேலன் குமரேசர்தாமிருந்தார்
தோகைமயிலேறுஞ் சுடர்வடிவேல்வந்திருந்தார்
சிங்கவாகனமேறுந் தேவிகொலுவிருந்தாள்
ஊர்காக்குங்காளி உத்தமியாள்கொலுவிருந்தாள்
துர்க்கையொடுகாளி தொடர்ந்துகொலுவிருந்தாள்
வள்ளிதெய்வானையுடன் மகிழ்ந்துகொலுவிருந்தாள்
பச்சைமலைநாயகியாள் பசுங்கிளியாள்தானிருந்தாள்
பூவைக்குறத்திவள்ளி பொருந்திக்கொலுவிருந்தாள்
வான்முனியும்செம்முனியும் வந்துகொலுவிருந்தார்

காத்தான்கருப்பனென்ற கட்ட பூசுர்வீற்றிருந்தார்
தொட்டியச்சின்னான் துரைமகனுந்தானிருந்தான்
மருமக்களெல்லோரும் மகிழ்ந்துகொலுவிருந்தார்
குமாரர்களெல்லோரும் கூடிக்கொலுவிருந்தார்
ஆரியமாலையுடன் அனைவோரும்வீற்றிருந்தார்
ஆயன் பெருமாள் அனந்த சயனனென்னும்
மாயன் பெருமாள் மங்கைமணவாளன்
ஐவரையுங்காத்த ஆதிநெடுமாலும்
பஞ்சவரைக்காத்த பாரளந்தோனுமிருந்தார்
கொற்றவரைக்காத்த கோபாலர்தாமிருந்தார்
மூட்டையிற்குஞ்சு முகமறியாப்பாலகரைப்
பிட்டுவளர்த்தெடுத்த பெருமாள்கொலுவிருந்தார்
செட்டையிற்காத்த ஜெயராமர்கொலுவிருந்தார்
அலமேலுமங்கையம்மாள் அரிராமசீதையரும்
மங்கைமோகலட்சுமியும் மகிழ்ந்துகொலுவிருந்தார்
சீதேவிபூதேவி சேர்ந்துகொலுவிருந்தார்
பாஞ்சாலனெக்கியத்திற் பதுமைபோல்வந்துதித்த
பத்தினியாள் துரோபதையும் பாரக்கொலுவிருந்தாள்

தளராத்தனஞ்சயரும் தருமர்கொலுவிருந்தார்
வாயுதேவ்ன்புத்திரனார் மதகரியுந்தவமிருந்தார்
தேவேந்திரன்புத்திரனார் தேர்விஜயன்தாமிருந்தார்
நகுலசகாதேவர் நலமாய்க்கொலுவிருந்தார்
கானக்குயிலழகர் கட்டழகரைவர்களும்
ஐவர்களுங்கூடி அன்பாக்கொலுவிருந்தார்
பட்டத்தாசி பைங்கிளியாள்சுபத்திரையும்
ஆயன்சகோதரியா ளரணங்குவீற்றிருந்தாள்
நல்லதங்காள்வீரதங்காள் நல்லசங்கோதியம்மாள்
அந்தநல்லசுந்தரியா ளானகுந்தியல்லியரும்
மலையனூர் தானமர்ந்த மாரிகொலுவிருந்தாள்
பச்செலும்புதின்றால் பாலொழுகுமென்றுசொல்லி
சுட்டெலும்புதின்றவளும் சுடலைவனங்காத்தவளும்
அக்காளுந்தங்கையரும் ஐந்திரண்டேழ்பேரும்
ஐந்திரண்டேழ்பேரும் அங்கேகொலுவிருந்தார்
தங்காதுபேய்பில்லி தன்பேரைச்சொன்னவுடன்
அங்காளஈஸ்வரியும் அமர்ந்துகொலுவிருந்தாள்

தொல்லைவினை நீங்கச் சுகுணமதையளிக்கும்
எல்லைப்பிடாரியரும் இங்கேகொலுவிருந்தார்
காவலர்கள் தான்புகழக் கனகசிம்மாதனத்தில்
காவலதிகாரி கட்டழகிவீற்றிருந்தாள்
இந்தமனைமுதலாய் ஏழுமனையுன்காவல்
சந்ததமுமுன்காவல் சாதுகுணமாரியரே
காவல்பதனமம்மா கட்டழகிமாரியரே
காவலுக்குள்ளே களவுவரப்போகுதம்மா
பாராசவுக்கிட்டுப் பத்திரமாய்க்காருமம்மா
தீராவினைகளைத்தான் தீர்க்குந்தயாபரியே
தாழும்பதிகளைத்தான் தற்காத்துரட்சியம்மா
ஏழுபிடாரியருமிசைந்துகொலுவிருந்தார்
மூத்தாலுராவுத்தன் முனையுள்ளசேவகனும்
முற்றத்தில்வந்து முனைந்துகொலுவிருந்தான்
பூவாடைகெங்கையென்று பூரித்துக்காத்திருக்கும்
பாவாடைராயனும் பக்கங்கொலுவிருந்தான்
தாட்சியில்லாதசிவ கங்கரியாளென்றுசொல்லும்
ஆட்சியுடன்கொலுவில் அரனுரும்வந்திருந்தார்

தேவி இருக்கொலுவில் சேர்ந்துகொலுவிருந்தாள்
ஆயி இருக்கொலுவில் அமர்ந்தாரனைவோரும்
மாரிகொலுவில் மனமகிழ்ச்சியாயிருந்தார்
வீரிகொலுவில் வீற்றிருந்தாரெல்லோரும்
ஆலித்துத்தானிருந்தார் அம்மை இருக்கொலுவில்
பாலித்துத்தானிருந்தார் பராபரியாள் தன்கொலுவில்
கூடிக்கொலுவிருந்தார் கொம்பனையாள் தன்னோடு
நாடிக்கொலுவிருந்தார் நாரணியாள் தன்னோடு
சந்தோஷம்பொங்கிச் சாயுச்சியமடைய
சந்தோஷமாகத் தாமிருந்தாரெல்லோரும்
நாடுதழைக்கவம்மா நல்லோர்மிகவாழி
மாடுதழைக்கவம்மா மாநிலத்தோர் தாம்வாழி
பாரிலுள்ள ஆடவரும் பாலகரும்மங்கையரும்
ஆரியரும்மற்றோரும் யாவர்களுந்தான்படிக்க
முன்னாளில்மூத்தோர் மொழிந்தமாரிதாலாட்டை
இன்னாளிற்போற்ற எழுதாவெழுத்ததினால்

அச்சுக்கூடத்ததிபர் அநேகரிதுவரையில்
உச்சிதமாய் அச்சிலிதை யோங்கப் பதிப்பித்தார்கள்
கற்றோருமற்றோரும் களிப்பாய்ப்படிப்பதற்குச்
சொற்குற்றமில்லாமல் சுத்தப்பிரதியதாய்ப்
பார்த்துப்பிழைகளெல்லாம் பரிந்துமிகத்திருத்தி
மனோன்மணியான்பேரில் மானிடர்கள் கொண்டாட
மாரியம்மன்தாலாட்டை வழுவுக்களில்லாமல்
பாரிலுள்ளோரிக்கதையைப் படித்துத்தொழுதேற்ற
பூபால ரேற்றுகிற பூமா தருள் நிறைந்த
கோபாலகிருஷ்ணக்கோன் கொண்டி தனையச்சிலிட்டார்
கற்றவரையாதரிக்குங் கருணையுள்ள அன்னவரும்
*மற்றுமவர் எக்ஸெல்ஸியர் மாபிரசுரம்வாழிமன்னே.
வாழிமிகவாழி வானவர்கள் தான்வாழி
ஐங்கரனுஞ்சங்கரனும் ஆறுமுகன் தான்வாழி
செங்கண்மால்ஸ்ரீராமர் சீதையருந்தான்வாழி
பஞ்சவர்களைவர்களும் பைங்கிளி துரோபதையும்

அல்லிசுபத்திரையும் அனைவோரும்தான்வாழி
முப்பத்துமுக்கோடி தேவர்களும்தான்வாழி
சொற்பெரியசந்திரன் சூரியனும்தான்வாழி
நாற்பத்தெண்ணாயிரம் நன்முனிவர்தான்வாழி
காக்குங்கருடசித்த வித்தியாதரர்வாழி
சந்திரனுஞ்சூரியனுந் தானவர்கள்தான்வாழி
இந்திரனுந்தேவர்களும் எல்லோருந்தான்வாழி
கற்பகக்காவும் காமதேனும்வாழி
பற்பலதீவும் பஞ்சாட்சரம்வாழி
காத்தானோடுவீரன் கருப்பன்மிகவாழி
சங்கிலிக்கருப்பன் சப்பாணிதான்வாழி
மாடன்இருளன் மற்றவரும்தான்வாழி
பாவாடைராயன் பலதேவரும்வாழி
இந்தக்கதைகேட்டோர் எந்நாளுந்தான்வாழி
பெருமையுடன்கேட்கும் பெரியோர்மிகவாழி
ஊரெங்குங்கீர்த்திபெற்ற உத்தமருந்தான்வாழி

பாருலகிலிக்கதையைப் படித்தோர்மிகவாழி
நாரணியாள் தன்கதையை நாள்தோறும்வாசிப்போர்
பாரில்புத்திரபாக்கியம் படைத்துமிகவாழ்வாரே
மாரி திருக்கதையை மனமகிழ்ந்துகேட்டோரும்
தேவி திருக்கதையைத் தீர்க்கமாய்க்கேட்டோரும்
பாடிப்படித்தோரும் பாக்கியத்தைத்தான்பெறுவார்
நாடித் துதிப்போரும் நற்கதியைத்தானடைவர்
ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரோடி
மூங்கில்போல்சுற்ற முசியாமல்வாழ்ந்திருப்பார்.

மங்களம் மங்களம் மாரியம்மன் தன்கதைக்கு
எங்கும் நிறைந்த ஈஸ்வரிக்கு மங்களமாம்.

## மாரியம்மன் தாலாட்டு

முற்றிற்று.

முத்தமிழ் க்ஷேத்திர மதுரா

## பாஸ்கரதாஸவர்கள் இயற்றிய
## இந்து தேசாபிமானிகள்

# செந்தமிழ்த் திலகம்.

மதுரைத் தமிழ் வித்துவான் ஸ்ரீ:

**நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள் முகவுரையுடனும்,**

**தேசாபிமானிகள் படங்களுடனும் கூடியது.**

நமது பரத நாட்டுத் தேசீய நன்மைக்காகவும் ஒற்றுமைக்காகவும், உரிமைக்காகவும் தேச ஊழியம் செய்துவருவோரான மகாத்மா காந்தி, கோபாலகிருஷ்ண கோகலே, பாலகங்காதர திலகர் முதலிய தேசபக்தர்கள் புகழ்ச்சியை எடுத்துக்கூறிய மதுரம் பழுத்துத் தேன் துளிக்கும் சந்தச்சுவைவாய்ந்த செந்தமிழ் பாடல்கள். இப்பாடல்களி லமைந்துள்ள சொற்சுவை பொருட்சுவை வர்ணமெட்டுகளின் இனிமை படிப்பவர்க்கும், கேட்பவர்க்கும் மிகுந்த உற்சாகத்தையும், ஆனந்தத்தையும் விளைவிக்குமென்பது புத்தகத்தை வாங்கிப்பார்ப்பவர்க்கே நன்கு விளங்கும்.

முதல் பாகம் புத்தகம் 1-க்கு விலை அணா 6.
இரண்டாம் பாகம் ,, விலை அணா 6.

**இ. இராமசாமிக் கோன்,**

புத்தகவியாபாரம், வடக்காவணிமூலவீதி,

மதுரை.